# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1959/6 - 2016 මාර්තු මස 21 වැනි සඳුදා - 2016.03.21

*1959/6 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2014 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு புவிச்சரிதவியல் நிறுவகத்தினால் ஆக்கப்படும் விதிகள்.*

ஹெட்டிகாமி முதியன்சேலாகே ரஞ்சித் பிறேமசிறி,
பொதுச் செயலாளர்,
புவிச்சரிதவியல் நிறுவகம்,
இலங்கை.

கொழும்பு,
*2016, மாச்சு 01.*

விதிகள்

*தலைப்பு.* 1. இவ்விதிகள் 2014 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகம் என எடுத்துக்காட்டப்படும்.

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம்.* 2. பேரவையானது இந்நிறுவகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் பேணப்படும் இடத்தினை தீர்மானித்தல் வேண்டும். நிறுவகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது பொதுவாக கொழும்பு மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும். ஆனால், பேரவையின் தீர்மானத்தினால் இலங்கையிலுள்ள வேறேதேனும் மாவட்டத்திற்கு பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தினை மாற்றுவதற்கான தத்துவத்தினை ஒதுக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

*உறுப்பாண்மை.* 3. நிறுவகத்தின் உறுப்பாண்மையானது கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள், கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு உறுப்பினர்கள் என்போரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள்.* 4. (1) நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள் "இணை உறுப்பினர்கள்" மற்றும் "உறுப்பினர்கள்" எனும் பெயர்களைக் கொண்டிருக்கின்றவர்களாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களாக வலிதாந்தன்மையை நாடுகின்ற விண்ணப்பகாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) புவிச்சரிதவியலில் ஒரு விசேட விஞ்ஞானமாணிப் பட்டம் அல்லது ;

(ஆ) புவியியல் விஞ்ஞானத்தினை ஒரு பாடமாக கொண்டுள்ள விஞ்ஞானமாணி பொது பட்டம், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனத்தினால் அளிக்கப்பட்ட புவியியல் விஞ்ஞானத்துறையில் முதுமாணி ;

(ஆ) மட்டம் (MSc அல்லது MPhil) அல்லது கலாநிதி (D) மட்டம் அல்லது இவ்விதிகளுக்கான அட்டவணை ''A''யில் தரப்பட்டுள்ளதான இலங்கை வேலைத் தகைமைகள் கட்டமைப்புக்கிணங்க (SLQF) அதனோடு இணைந்ததான எவையேனும் பாடங்கள் .

(3) பேரவையானது அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டத்தினை அல்லது அதற்குச் சமமான தகைமைகளை கொண்டிராத தொழிலாண்மையாளரிடம் இருந்து கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினராக வலிதாக்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளாது.

(4) இணைப்பாடங்கள் தொடர்பிலான பிணக்கொன்றின் பட்சத்தில் பேரவையின் தீர்மானமே இறுதியானதாதல் வேண்டும்.

(5) இந்நிறுவகமானது விண்ணப்பதாரிகளுக்கு தெளிவுபடுத்தும் வகையில் மற்றும் மதிப்பிடலின் கடந்தகால அனுபவத்தினடிப்படையிலும் விண்ணப்பங்களை வலிதாக்கிக் கொள்வதற்காகவும் தமது முதல் பட்டத்திற்கும் பட்டப்பின் படிப்பிற்கும் இடையிலான தொடர்புகள் மற்றும் தேவைப்படுத்தப்படும் போட்டிகளில் சிறப்பாக விண்ணப்பதாரிகள் செயற்படுவதற்கான அனுபவங்கள் தொடர்பிலும் இவ்விதிகளுக்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பதற்கு தேவைப்படுத்தப்படும் ஆகக்குறைந்த தகைமையாக இதற்கு பொருத்தமான பொது வழிகாட்டியாக இதனைக் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரிவு 4.2 இன் கீழ் பேரவையினால் (இணையுறுப்பினர் அல்லது உறுப்பினர்) கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினராக அனுமதிப்பதற்கு பேரவையினால் தகைமையுடையவரென தீர்மானிக்கப்படும் வேட்பாளர்களின் பட்டியலொன்று வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அனைத்து கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய வெளியீட்டுத் திகதியிலிருந்து இரண்டு வார கால இடைவெளியின் பின்னரான அக்காலப்பகுதியின் போது வேட்பாளரின் தகுதி மற்றும் தொடர்பாடல் அல்லது நடத்தை தொடர்பில் செயலாளர் பேரவைக்கு கிடைக்கும் வகையில் அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும். இணையுறுப்பினர் ஒருவராக அல்லது உறுப்பினரொருவராக வருவதற்கு பொருத்தமானவரும் தகைமையும் உள்ளதென குறித்த வேட்பாளர் தொடர்பில் பேரவையானது திருப்திப்படுமாயின், அவரை அனுமதிக்கப்பட்ட போட்டியாளராக பிரகடனப்படுத்தல் வேண்டும்.

(7) அனுமதியின் பின்னர் ஒவ்வொரு கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினரும் அவர் விரும்புவாராயின், உறுப்பினர்கள் சமுகமளிக்கும் முதலாவது பொதுக் கூட்டத்தில் அத்தகைய கூட்டத்தில் தலைவரால் அல்லது தவிசாளரால் அறிமுகப்படுத்தல் வேண்டும்.

இணை உறுப்பினர்.

5. இணை உறுப்பினரொருவராக அனுமதியை நாடுகின்ற ஒவ்வோராளும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) 45 வயதிற்கு மேற்பட்டவராகவிருத்தல் வேண்டும் ;

(ii) இவ்விதிகளுக்கான அட்டவணை அ வில் தரப்பட்டுள்ளதான நிபந்தனைகள் மற்றும் தகைமைகளை பூர்த்தி செய்கின்ற உறுப்பினரொருவராக அல்லது ஆளொருவராகவுள்ளவர் ''உறுப்பினர்'' எனும் தரத்திற்கு அனுமதிக்கப்படுதல் அவசியமானதாகும் ; அத்துடன்

(iii) பின்வருவனவற்றில் இவற்றுள் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இவ்விதிகளுக்கான அட்டவணை அ வில் குறித்துரைக்கப்பட்டதான புவிச்சரிதவியல் எனும் துறையில் அல்லது இணைப்பாடமொன்றாக ஆகக்குறைந்தது ஆறு (6) ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன், பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான முறையில் அதன் முன்னேற்றத்திற்காக நிறுவகத்துக்கு போதுமானளவு பங்களிப்பை வழங்குதல், அல்லது

(ஆ) புவிச்சரிதவியல் பற்றிய அறிவும் தொழிலாண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய முக்கதியத்துவமும் பேரவையின் அபிப்பிராயத்தில் அத்தகைய ஆளை இணை உறுப்பினரொருவராக அனுமதிக்கப்படுவதற்கு தகமையாக்குகின்றது.

*6.* உறுப்பினர் எனும் தரத்திற்கு அனுமதியை நாடுகின்ற ஒவ்வொரு ஆளும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :- உறுப்பினர்.

(i) 30 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் அத்துடன்

(ii) அத்தகைய தராதரங்கள் தேவைப்பாடுகள் மற்றும் போதியளவு தொழிலாண்மைப் பயிற்சியுடன் இயைபான பட்டம் மற்றும் கல்வியை கொண்டிருத்தல் மற்றும் இவ்விதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளதான நடைமுறை அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ; மற்றும்

(iii) முறையான விண்ணப்பம் மற்றும் தெரிவு செய்யும் நடவடிக்கைமுறை என்பவற்றினால் உறுப்பினர் எனும் தரத்திற்கு அனுமதிக்கப்பட உரித்துடையவரான அத்தகைய உறுப்பாண்மையினால் உரித்தாக்கப்பட்டுள்ளவரான இலங்கை, புவிச்சரிதவியல் நிறுவகத்தின் இணைந்த உறுப்பினர் எனும் தரத்தில் மூன்றாண்டுகளுக்கு உறுப்பினரொருவராகவுள்ளவாரன ஆளொருவர்.

*7.* *(1)* மதிப்பிற்குரிய ஆட்கள், இணை உறுப்பினர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் நிறுவனமயப்பட்ட உறுப்பினர்கள் என்போர் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன் இத்தரங்களுக்கான அனுமதிக்கான தகமை மற்றும் வேறு தகமை என்பன இவ்விதிகளில் விபரிக்கப்படுதல் வேண்டும். கூட்டிணைக்கப் படாத உறுப்பினர் கள்.

*(2)* கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்கள் நிறுவகத்தின் பொதுக்கூட்டங்களில் சமுகமளிப்பதற்கு அல்லது வாக்களிப்பதற்கு அல்லது ஏதேனும் பொதுக் கூட்டத்தில் கோரிக்கைக்கு அல்லது கோரிக்கையில் கையொப்பமிடுவதற்கு உரித்துடையவராக்கப்படுதலாகாது. ஆனால், ஏதேனும் விசேட குழுவின் உறுப்பினரொருவராக பணியாற்றுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

*8.* *(1)* பேரவையானது கௌரவ உறுப்பினரொருவராக பிரசித்திபெற்ற மற்றும் முக்கியமான ஆட்களை அனுமதிப்பதற்கு தத்துவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆயின், அவ்வாறு அனுமதிக்கப்பட்ட ஆட்கள் எந்த ஒரு நேரத்திலும் மூன்று கௌரவ ஆட்களைக் கொண்டிருத்தலாகாது. கௌரவ உறுப்பினர் கள்.

*(2)* ஆளெவரும் கௌரவ உறுப்பினரின் தரத்திற்கான அனுமதிக்காக விண்ணப்பிக்கும் உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். பேரவையானது நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களால் கௌரவ உறுப்பினரின் தரத்திற்காக ஆக்கப்பட்ட பெயர் குறித்த நியமனங்களை மட்டும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். பேரவையானது அதன் பூரண உறுப்பாண்மையின் ஆகக்குறைந்தது மூன்றில் இரண்டு பங்கிலான வாக்கொன்றினால் கௌவர உறுப்பினரின் தரத்திற்கு ஆட்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

*9.* இணைந்த உறுப்பினர் எனும் தரத்திற்கு அனுமதியை நாடுகின்ற ஆளொவ்வோருவரும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :- இணைந்த உறுப் பினர்கள்.

(i) இலங்கை வேலைத்தகைமை கட்டமைப்பு (SLQF) இல் 3, 4, 5 மற்றும் 6 மட்டங்களினால் புவிச்சரிதவியல் தகைமைபெற்ற விஞ்ஞானமாணி விசேட பட்டத்தினை அடுத்து மூன்று ஆண்டுகளைக் கொண்டிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை வேலைத்தகைமை கட்டமைப்பு (SLQF) இன் 3 ஆம் மற்றும் 4 ஆம் மட்டங்களில் முப்பத்து மூன்று சதவீதம் (33%) மற்றும் 5 ஆம் மட்டத்தில் ஐம்பது சதவீதமுள்ள (50%) தகைமைபெற்ற புவிவிஞ்ஞானத்தில் அல்லது இணை பாடங்களில் விஞ்ஞானமாணி பொது பட்டத்தில் ஐந்து (5) வருடங்களின் பின்னர்,

அத்துடன்

(ii) காலத்திற்கு காலம் பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறான புவியியல் விஞ்ஞானத்துறையில் போதியளவு பயிற்சியினைக் கொண்டிருத்தல்.

*10.* தகுதிகாண் சான்றிதழ் பெற்ற உறுப்பினர் எனும் தரத்திற்கு அனுமதியினை நாடுகின்ற ஒவ்வோராளும்,- தகுதிகாண் சான்றிதழ் பெற்ற உறுப்பினர்.

(i) இலங்கை வேலைத்தகைமை கட்டமைப்பு (SLQF) இல் 3, 4, 5 மற்றும் 6 ஆம் மட்டங்களினால் புவிச்சரிதவியலில் விஞ்ஞானமாணி விசேட பட்டம் (BSc. Spl) 3, 4 மற்றும் 5 ஆம் மட்டங்களினால் புவிச்சரிதவியல் (BSc) விஞ்ஞானமாணி பொது பட்டங்களின் கற்கை நெறிகளை உள்ளடக்கிய 3 மற்றும் 4 ஆம் மட்டங்களினால் மூன்றில் ஒன்று (33%) ஆகவுள்ள 5 ஆம் மட்டத்தில் (50%) இனையும் கொண்டிருத்தல்;

(ii) கல்விக்குழுவின் பரிந்துரையின் மீது பேரவையினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அல்லது வேறு ஏதேனும் அத்தகைய பரீட்சைகளில் அல்லது வேறு ஏதேனும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல்.

*மாணவ உறுப் பினர்கள்.*

11. மாணவ உறுப்பினரின் தரத்திற்கு அனுமதியை நாடுகின்ற ஆளொவ்வருவரும் கல்விக் குழுவின் பரிந்துரையின் மீது நோக்கத்துக்காக பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட புவிச்சரிதவியல் அல்லது இணைப்பாடங்களில் கல்வி கற்கைநெறியொன்றை தொடருதல் வேண்டும்.

*வெளிநாட்டு உறுப்பினர்கள்.*

12. (1) வெளிநாட்டு சாதாரண உறுப்பினர்கள் வெளிநாட்டு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் வெளிநாட்டு உறுப்பினர்களுக்கான தகைமைகள் மற்றும் நியமங்கள் என்பன இவ்விதிகளில் விபரிக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) 13 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் வெளிநாட்டு நிறுவனமயமான உறுப்பினர்கள் வெளிநாட்டு உறுப்பினர்களாதல் வேண்டும்.

*நிறுவனமயப்படுத் தப்பட்ட உறுப் பினர்கள்.*

13. (1) பேரவையானது அதன் தீர்மானத்தின் மூலம் நிறுவகத்தின் பொதுக் குறிக்கோள்களை புறக்குறிப்பிடுகின்ற ஏதேனும் குழுமத்துக்கு, கம்பனிக்கு கழகத்துக்கு, குழுவுக்கு அல்லது நிறுவனத்துக்கு அனுமதிக்கலாம் அத்துடன் நிறுவகத்தின் நிறுவனமயமான உறுப்பினரொருவராக நிறுவகத்தின் வேலையை ஆதரிக்கலாம். அவை பொதுமக்களுக்கு உரிய புவிச்சரிதவியல் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கும் சான்றிதழ் ஒன்றை வழங்க தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் (COA).

(2) பேரவையானது உரிய குழுமம், கம்பனி, கழகம், குழு அல்லது நிறுவனம் எதிரிடையாக, வேண்டுமென்று செய்யாமல் அல்லது தவறுதலாக புவிச்சரிதவியல் எனும் தொழிலாண்மைக்கு பங்களிப்பு செய்திருப்பின் COA ஆனது மீளப்பெறும் உரிமையினைக் கொண்டுள்ளது.

(3) பேரவையானது முற்போந்த பந்தியின் கீழ் நிறுவனமயமான உறுப்பினரொருவராக அனுமதிக்கப்படும் ஏதேனும் குழுமம், கம்பனி, கழகம், குழு அல்லது நிறுவனம் என்பன எந்நேரத்திலும் காட்டப்படும் காரணத்துக்காக பிரகடனப்படுத்தலாம் என்பதுடன் நீண்ட காலத்திற்கு நிறுவன மயமான உறுப்பினராக இருக்கமாட்டார் என்பதுடன் அதன் மீது அத்தகைய குழுமம், கம்பனி, கழகம், குழு அல்லது நிறுவனம் என்பன உடனடியாக நிறுவனமயமான உறுப்பினராக இருத்தலானது இல்லாதாக்கப்படுதல் வேண்டும்.

*பட்டயம்பெற்ற புவிச்சரிதவிய லாளர்.*

14. (1) கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினரின் தரங்களிலுள்ளவர்களான உறுப்பினர்கள் பட்டயம்பெற்ற புவிச்சரிதவியலாளர் எனும் தரத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் (உறுப்பினர் மற்றும் இணை உறுப்பினர்) அத்துடன் விண்ணப்பிப்பதற்கான நடவடிக்கைமுறையின் அட்டவணை ஆ வில் விதித்துரைக்கப்பட்டவாறான நடவடிக்கை முறை மற்றும் தேவைப்பாடுகள் பட்டயம் பெற்ற புவிச்சரிதவியலாளர் அவர்களுடைய பெயரின் பின்னர் CGeol எனும் சிறப்பியல்பினை எடுப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும். உறுப்பினரானவர் விண்ணப நேரத்தில் (அட்டவணை இ) விண்ணப்பத்துடன் இணைத்து தொழிலாண்மை மீளாய்வு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

(2) பட்டயம்பெற்ற புவிச்சரிதவியலாளராக விண்ணப்பிப்பதற்கு தகைமையுடையவராக வருவதற்கு விண்ணப்பகாரர் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினரொருவராக ஆகக்குறைந்தது 3 ஆண்டுகள் உறுப்பாண்மையினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

(3) பட்டயம் பெற்ற புவிச்சரிதவியலாளரொருவருக்கான மதிப்பீடானது அட்டவணை ஆ வில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு செய்தல் வேண்டும்.

(4) பட்டயம் பெற்ற புவிச்சரிதவியலாளர்கள் நிறுவகத்தின் தொழிலாண்மை இலச்சினையொன்றை வழங்குதல் வேண்டும். அதனை அவர் அல்லது அவள் ஆவணங்களை, அறிக்கைகளை, கூற்றுக்களை மற்றும் ஏனைய வேறு எழுத்துமூல தொடர்பாடல்களை புறக்குறிப்பிடுவதற்கு பயன்படுத்துதல் வேண்டும். உறுப்பினரானவர் ஆவணங்கள், அறிக்கைகள், கூற்றுக்கள் மற்றும் வேறு ஏனைய தொடர்பாடல்கள் என்பவற்றின் மீதான அவருடைய அறிவினை சுட்டிக்காட்டும் இலச்சினையினுள் அவருடைய உண்மையான கையொப்பத்தை இடுதல் வேண்டும். உறுப்பினரானவர் அவருடைய சொந்த அல்லது உறுப்பினரால் மீளாய்வு செய்யப்பட்ட அல்லது நேரடியாக மேற்பார்வை செய்யப்பட்ட விடயங்களில் மட்டும் கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

(5) மேலேயுள்ள பிரிவுகளை மீறுகின்ற பட்டயம் பெற்ற புவிச்சரிதவியலாளர் ஒருவர் அனுமதி மற்றும் ஒழுக்கம்சார் செயல்முறைகள் குழுவின் ஊடாக செல்வதாக கருதப்படுதல் வேண்டும். குற்றமிழைத்ததாக கண்டுபிடிக்கப்படின் தண்டப்பணம் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் உறுப்பாண்மைய மற்றும் ஆகக்கூடுதலாக இரண்டு ஆண்டுகளுக்கு குழுவினால் தீர்மானிக்கப்பட்ட காலத்துக்கான இலச்சினையானது கைமீட்கப்படும். நிறுவகத்தின் ஒழுக்கக் கோவையின் ஈ எனும் அட்டவணையை பார்க்கவும்.

15. (1) நிறுவகத்தின் உறுப்பினர்கள் கீழே குறிப்பிட்டவாறு அவர்களுடைய பெயர்களின் பின்னர் மகுடத்தினை எடுப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும். தரங்களை காட்டுவதற்கான எழுத்துக்களைப் பயன்படுத்துதல்.

பட்டயம் பெற்ற புவிச்சரிதவியலாளர் - CGeol.

கௌரவ இணை உறுப்பினர்கள் - FIGSL (Hony.)

இணை உறுப்பினர்கள் - FIGSL

உறுப்பினர்கள் - MIGSL

இணைந்த உறுப்பினர் - AMIGSL

தகுதிகாண் சான்றிதழ் பெற்ற உறுப்பினர் - LIGSL

மாணவ உறுப்பினர் - no style

(2) ஆளெவரும் அல்லது ஆட்கள் குழு எதுவும் CGeol, FIGSL, FIGSL ( Hony), MIGSL, AMIGSL, LIGSL எனும் முடிவெழுத்துக்களை அல்லது மகுடத்தினை பயன்படுத்துதலாகாது. அல்லது ஏதேனும் தனிப்பட்ட தொடர்பாடலில் புத்தகம், சஞ்சிகை அல்லது வேறு வெளியீட்டில் அதனை பெயராக அல்லது பெயரின் பாகமாக பயன்படுத்துதலாகாது. பட்டயம் பெற்ற புவிச்சரிதவியலாளரின் இடாப்பின் மீது யாருடைய பெயர் தோன்றுகின்றதோ அந்தப் பெயருடைய கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் பட்டயம்பெற்ற புவிச்சரிதவியலாளராக தம்மை விபரிப்பதற்கு உரித்துடையவராவார். அத்துடன் அவருடைய பெயரின் பின்னர் அவ்விபரணத்தினை பயன்படுத்துவதில் CGeol, FIGSL (Sri Lanka) அல்லது CGeol MIGSL (Sri Lanka) என்னும் பெயர்களை உடைய பின்வரும் சுருக்கெழுத்து வடிவங்களுக்கிணங்க கூறப்பட்ட அவருக்கு உரித்தாகவுள்ள வகுப்பின் பதவிக்கு முன்னர் அதனை இடுதல் வேண்டும்.

16. (1) புவிச்சரிதவியலுடன் தொடர்புடைய பொதுக்கூற்றுக்கள் எவையும் அல்லது வேறு எவையேனும் உணர்வு ரீதியிலான கூற்றுக்கள் எவையும் அனுமதி மற்றும் ஒழுக்க சார் செயல்முறை குழுவின் புறக்குறிப்பு இருந்தாலன்றி வெளிப்படுத்துப்படுதலாகாது. தரங்களை ஆளுகின்ற விதிகள்.

(2) அத்தகைய கொடுப்பனவானது நிலுவையாகவுள்ள திகதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு உறுப்பாபண்மைக் கட்டணங்களின் நிலுவையை கொண்டுள்ளவரான எவரேனும் உறுப்பினர் நிறுவகத்தின் உறுப்பினராதல் இல்லாதாக்கப்படலாம் என்பதுடன் ஆனால் அத்தகைய உறுப்பினர் எல்லா நிலுவைகளுடன் சேர்த்து நடைமுறை ஆண்டுகளுக்கான உறுப்பாண்மையின் கொடுப்பனவை செலுத்துவதன் மீது அவருடைய உறுப்பாண்மையின் அதே தரத்திற்கு மீள அனுமதிக்கப்படலாம்.

(3) உறுப்பினரின் வகுப்புக்கான ஒவ்வொரு அனுமதி அல்லது இடமாற்றமானது பேரவை விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்தில் இருத்தல் வேண்டும். இம் முன்மொழிவானது ஆகக்குறைந்த 2 கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் போட்டியாளரின் அனுமதியை அவருடைய தனிப்பட்ட அறிவிலிருந்து பரிந்துரைப்பதுடன் அவருடைய விண்ணப்பம் பிரதிபயனுக்கு பெறுமதியானதாகும். அத்தகைய முன்மொழிவானது அமுலில் உள்ள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க தொழிலாண்மை மீளாய்வு பரிசோதனைக்கு அனுமதிப்பதற்காக போட்டியாளர் தகுதியானவரெனின், தீர்மானத்திற்கான பேரவைக்கு அதனை சமர்ப்பிப்பவரான செயலாளருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

17. (1) பேரவையானது உறுப்பாண்மையிலிருந்து வெளியேற்றுவதற்கும், காலப்பகுதியொன்றுக்கு உறுப்பாண்மையிலிருந்து இடைநிறுத்துவதற்கும் அனுமதி மற்றும் ஒழுக்கம் சார் செயல்முறைகளுக்கான குழுவினால் நடாத்தப்பட்ட விசாரணையின் பின்னர் தவறான நடத்தைக்கு அல்லது ஒழுக்கம் சாராத செயல்முறைக்கு குற்றம் சாட்டப்பட்டவரான உறுப்பினரை தடை செய்தல் அல்லது அங்கீகாரம் மறுத்தல் மற்றும் பேரவையின் பூரண தற்துணிபின் ஆகக்குறைந்தது மூன்றில் இரண்டு அத்தகைய ஒழுங்காற்று செயலின் சார்பில் வாக்களித்தல் வேண்டும். (அட்டவணை ஈ). உறுப்பாண்மையிலிருந்து விலக்குதல் மற்றும் இடைநிறுத்தல்.

(2) சட்ட பொறுப்புடைமையின் கீழ் உறுப்பினர் ஒருவர் அல்லது கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர் அனுமதிகள் மற்றும் ஒழுக்கம் சார் செயல்முறைகள் குழுவின் சம்மதத்துடன் அவருடைய தொழிலாண்மையை செயல்முறைப்படுத்தலாம். ஏதேனும் நீதிமன்றத்திலிருந்து மறியற்தண்டனையொன்று உறுப்பினருக்கு கிடைக்கப்பெறின் உறுப்பாண்மையானது தானாகவே மீளப்பெறப்படும். எவ்வாறாயினும், அவருடைய தண்டனையின் முடிவிலிருந்து இரண்டு ஆண்டு காலப்பகுதியின் பின்னர் அது மீளமைக்கப்படும். உறுப்பாண்மை முடிவுறுத்தப்படும் அல்லது இடைநிறுத்தப்படும் அல்லது உறுப்பாண்மையிலிருந்து வெளியேற்றப்பட்டவரான எவரேனும் உறுப்பினர் அவருக்கு வழங்கப்பட்ட உறுப்பாண்மையின் ஏதேனும் சான்றிதழை பேரவைக்கு உடனடியாக திருப்பியனுப்புதல் வேண்டும் என்பதுடன் பேரவை வேறுவகையில் முடிபு செய்தாலன்றி நிறுவகத்தின் எவையேனும் தகைமைகள் அல்லது நிறுவகத்தின் மகுடங்குளுக்கும் மேலும் உரித்துடையவராதலாகாது.

சான்றிதழ்கள்.

18. உறுப்பாண்மைக்கு அனுமதிக்கப்படுபவரான ஒவ்வொரு கூட்டிணைக்கப்பட உறுப்பினர், ஒவ்வொரு இணைந்த உறுப்பினர் மற்றும் ஒவ்வொரு தகுதிகாண் சான்றிதழ் பெற்ற உறுப்பினர் என்போர் ஆங்கிலத்தில் அல்லது வேறுவகையில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் விரும்பின் தோதான சான்றிதழை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இச்சான்றிதழ் நிறுவகத்தின் ஆதனத்தில் எஞ்சியிருத்தல் வேண்டும் என்பதுடன் வைத்திருப்பாளர் உறுப்பினரொருவராக இல்லாதொழிந்தால் நிறுவகத்திற்கு வேண்டுகோளின் பேரில் திரும்புதல் வேண்டும்.

உறுப்பாண்மைக் கட்டணங்கள்.

19. (1) உறுப்பாண்மைக் கட்டணங்கள் ஆனவை பின்வருவனவாதல் வேண்டும் :-

(i) பட்டயம் பெற்ற புவிச்சரிதவியலாளர்களின் தரத்திலுள்ள உறுப்பினர்கள் அவர்களுடைய வருடாந்த ஒப்பப்பணமாக ரூபா 10,000 எனும் தொகையினை செலுத்துதல் வேண்டும்;

(ii) இணையுறுப்பினர் தரத்திலுள்ள உறுப்பினர்கள் அவர்களுடைய வருடாந்த ஒப்பப்பணமாக ரூபா 7,500 வழங்குதல் வேண்டும்;

(iii) உறுப்பினர் எனும் தரத்திலுள்ள உறுப்பினர்கள் அவர்களுடைய வருடாந்த ஒப்பப்பணமாக ரூபா 7,500 வழங்குதல் வேண்டும்;

(iv) இணைந்த உறுப்பினர் எனும் தரத்திலுள்ள உறுப்பினர்கள் அவர்களுடைய வருடாந்த ஒப்பப்பணம் ரூபா 3,000 இனை தொகையாகச் செலுத்துதல் வேண்டும் ;

(v) தகுதி காண் சான்றிதழ் பெற்ற உறுப்பினர்கள் அல்லது மாணவ உறுப்பினர்களின் தரத்திலுள்ள உறுப்பினர்கள் அவர்களுடைய ஆண்டிறுதி ஒப்பப்பணமாக ரூபா 2,000 செலுத்துதல் வேண்டும்;

(vi) கௌரவ இணையுறுப்பினர்கள் ஏதேனும் ஒப்பப்பணம் செலுத்துவதற்கு கடப்பாடுடைய வராலாகாது.

(vii) வெளிநாட்டு சாதாரண உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு கைத்தொழில் உறுப்பினர்கள் அவர்களுடைய ஆண்டிறுதி ஒப்பப்பணமாக முறையே US$ 100 மற்றும் US$ 2000 உம் செலுத்துதுல் வேண்டும் ;

(viii) நிறுவனமயமான உறுப்பினர்கள் அவர்களுடைய ஆண்டிறுதி ஒப்பப்பணமாக ரூபா 20,000 செலுத்துதல் வேண்டும்.

(2) இவ்விதியின் உப பந்தி (1) இல் விதித்துரைக்கப்பட்ட உறுப்பாண்மைக் கட்டணத்துக்கு மேலதிகமாக நிறுவகத்திற்கான அனுமதிக்கான புதிய விண்ணப்பக்காரர்கள் பின்வரும் செய்முறைக் கட்டணங்களை செலுத்துதல் வேண்டும் :-

| | | |
|---|---|---|
| இணை உறுப்பினர் | ரூபா | 2,000 |
| இணைந்த உறுப்பினர் | ரூபா | 1,000 |

தகுதிகாண் சான்றிதழ் பெற்ற உறுப்பினர் ரூபா 1,000 ;

மாணவ உறுப்பினர் ரூபா 500.

(3) நிறுவகத்தின் கூட்டிணைக்கப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்படாத உறுப்பினர்களுக்கான ஆண்டிறுதி ஒப்பப்பணங்கள் முற்போந்த ஆண்டின் ஏப்பிறல் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) மேலேயுள்ள வீதங்கள் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட எவையேனும் வரிகள் அல்லது வீதங்களை உள்ளடக்காது.

(5) அனுமதிக்கான விண்ணப்பமானது பேரவையினால் செய்முறைக்காக ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட செய்முறைக் கட்டணமானது விண்ணப்பகாரருக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

(6) செய்முறைக் கட்டணமெதுவும் மாணவ உறுப்பினர் தவிர்ந்த எவரேனும் உறுப்பினரால் செலுத்தப்படுதலாகாது.

(7) இவ்விதிகளின் கீழ் ஒப்பப்பணக் கட்டணமாக செலுத்துவதற்கு கடப்பாடுடையவரான உறுப்பினர்கள் அத்தகைய ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டின் 30 ஆம் நாளுக்கு முன்னர் ஒப்பப்பண கட்டணத்தினை செலுத்துவதன் மூலம் ஒவ்வொரு புதிய பஞ்சாங்காண்டிற்கான அவர்களுடைய உறுப்பாண்மையினை மீளப் புதுப்பித்தல் வேண்டும்.

(8) பேரவையின் முடிபினால் அவர்களுடைய உறுப்பாண்மைக்கு இழப்பீடு செய்கின்றவரான நிறுவகத்தின் உறுப்பினர்கள் இராஜினாமா செய்தல் அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காக அவர்களுடைய உறுப்பாண்மைக் காலத்தின் போது நிறுவகத்திற்கு அவர்கள் செலுத்திய ஏதேனும் ஒப்பப்பணம், விண்ணப்பம் அல்லது இடமாற்றத்திற்கான கட்டணத்தினை மீளளிக்கப்படுவதற்கு கோருவதற்கு உரித்துடையவராதலாகாது.

20. நிறுவகத்தின் பொதுச் செயலாளர் அவர்களுடைய அதில் அவர்களுடைய பெயர்கள், உறுப்பாண்மையின் தரம், நிரந்தர முகவரிகள், உறுப்பாண்மை வழங்கப்பட்ட திகதி, ஆளொருவர் உறுப்பினரொருவராக இல்லாதொழிக்கப்பட்ட திகதி மற்றும் பொதுச் செயலாளர் அவசியமானது எனக் கருதும் வேறு ஏதேனும் இயைபான தகவல் என்பவற்றை வழங்கும் உறுப்பினர்களின் இடாப்பினை பேணுதல் வேண்டும். உறுப்பாண்மை பற்றிய இடாப்பு.

21. (1) நிறுவகமானது பின்வருவோரைக் கொண்ட பேரவையைக் கொண்டிருத்தல் வேண்டும் :- பேரவையின் அமைப்பு.

(i) தலைவர் (1) உதவித் தலைவர் (1), பொதுச் செயலாளர் (1), பொருளாளர் (1), பதிப்பாசிரியர் (1) அனுமதி மற்றும் ஒழுக்கம் சார் செயல்முறைகள் குழுவின் தவிசாளர் (1) மற்றும் கல்விக் குழுவின் தவிசாளர் (1) ஆவர்கள். அவர்கள் அனைவரும் ஆண்டிறுதி பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்;

(ii) மூன்று மேலதிக உறுப்பினர்கள் ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(iii) முன்னைய பேரவையின் பழைய தலைவர் (1) பேரவையின் உறுப்பினராக சேவையாற்றுதல் வேண்டும்.

(2) அனுமதிகள் மற்றும் ஒழுக்கம்சார் செயல்முறைக் குழுவின் தலைவர், உதவி தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், பதிப்பாசிரியர், தவிசாளர் என்போர் அனைவரும் பேரவையினால் அல்லது IGSL இனால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் தேசிய குழு அல்லது சங்கத்தினால் 3 ஆண்டுகள் சேவையாற்றிய அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அப்போதைக்கு பதவி வகிக்கின்ற நிறுவகத்தின் பேரவையானனது இவ்விதிகளுக்கிணங்க புதிய பேரவையானது அமைத்துருவாக்கப்படும் வரை நிறுவகத்தின் பேரவையானது தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும்.

(4) பேரவையின் அனைத்து உறுப்பினர்களும் கௌரவம் எனும் தகைமையில் பணியாற்றுதல் வேண்டும்.

(5) பேரவையானது ஆகக்குறைந்தது ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கொரு தடவை கூடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண்ணானது ஐந்தாகவிருத்தல் (5) வேண்டும். நிகழ்ச்சி நிரலில் சுட்டிக்காட்டும் அத்தகைய பேரவை கூட்டத்தின் அறிவித்தலானது கூட்டத்தின் ஆகக்குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் ஒவ்வொரு பேரவை உறுப்பினருக்கும் எழுத்தில் செயலாளரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

(6) பேரவை கூட்டங்கள் பொதுச் செயலாளரினால் கூட்டப்படுதல் வேண்டும்.

(7) பேரவையின் எவரேனும் உறுப்பினர் அத்தகைய சமுகமாயிராமைக்கான காரணத்தினை எழுத்தில் அறிவிக்காமல் பேரவையினுடன் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு சமுகமாயிராதவிடத்தும் அத்தகைய உறுப்பினர் பேரவையின் அடுத்த கூட்டத்திற்கு சமுகமளிக்க கோரி அத்தகைய உறுப்பினருக்கு பொதுச் செயலாளர் விசேட எழுத்து மூலம் அனுப்பிய பின்னரும் அவர் பேரவையின் அவருடைய உறுப்பாண்மையினை வெறிதாக்கியதாக கருதப்படுதல் வேண்டும்.

(8) தலைவர் கருதுகின்ற எவரேனும் ஆள் புவிச்சரிதவியல் விஞ்ஞானங்கள் மற்றும் தொடர்புடைய துறைகளில் அவருடைய முக்கியத்துவத்தினை நோக்கும் முறையில் பேரவைக்கு செயலாற்றுதல் வேண்டும். ஆனால் விதி 6 இல் குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையின் காரணத்தினால் அனுமதிக்கப்பட முடியாது. அது பேரவையின் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கு தலைவரால் அழைக்கப்படலாம். அத்தகைய ஆள் பேரவையின் செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட உரிமைகளை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் வாக்களிக்கும் உரிமைகளைக் கொண்டிருத்தலாகாது.

(9) தலைவரின் சம்மதமின்றி அத்தகைய உறுப்பினர் தேவை எழுகின்றபோது உலகத்தின் ஏதேனும் பாகத்திலிருந்து இலத்திரனியல் ஊடகத்தினூடாக கூட்டங்களில் பங்கு பற்ற முடியும்.

(10) பேரவையின் தலைவர் மற்றும் செயலாளர் தவிர்ந்த எல்லா உறுப்பினர்களும் முதலாவது நிலையில் ஓராண்டுக்கு சேவையாற்றல் வேண்டும். பொதுக்குழுவின் பெரும்பான்மையினரால் தீர்மாக்கப்பட்டவாறு ஏனையவர்கள் மேலதிக இரண்டு ஆண்டுகாலப்பகுதிக்கு மட்டும் அதே நிலைக்கு மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு தகைமையுடையவராக்கப்படலாம். தலைவர் மூன்று ஆண்டுகளுக்கு சேவையாற்றிய பின்னர் மீள் தேர்தலுக்காக தகைமையுடையவராதலாகாது.

(11) பேரவைக்கான தேர்தலுக்கான வேட்பாளர்கள் ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தில் வாக்களிக்கும் உறுப்பினர்களினால் முன்மொழிதல் வேண்டும்.

(12) எவரேனும் உறுப்பினர் தலைவருக்கு எழுத்தினால் பேரவையிலிருந்து அவருடைய அல்லது அவளுடைய பதவி விலகலை அளிக்கலாம். அத்தகைய இராஜினாமா அதன் கூட்டங்களில் ஒன்றை பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்படும்வரை தொழிற்படுத்தப்படுதலாகாது. தலைவர் செயலாளருக்கு அவருடைய இராஜினாமாவினை வழங்கலாம். (பேரவையின் உதவி தலைவர் நடைமுறை ஆண்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட அடுத்துறும் ஆண்டுக்கான வேலையின் தொடர்ச்சிக்கு பொறுப்புடைமையாக்குதல் வேண்டும்.

(13) பேரவையானது குழுவின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தற்காலிகமாக கிடைக்கப்பெறாத தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு செயற்படுவதற்கு உறுப்பினர்களுக்கு அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும்.

(14) பேரவையானது ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தில் நிறுவகத்தின் ஆண்டறிக்கையொன்றையும் முறையாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றொற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

பேரவையின் தத்துவங்கள்.

22. (1) நிறுவகத்தின் அலுவலர்களின் நிருவாகமும் முகாமைத்துவமும் பேரவையில் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது பின்வரும் கடமைகள் மற்றும் பொறுப்புடைமைகளை நிறைவேற்றுவதற்கு அதன் எல்லா தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கு அதிகாரத்தை கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) நிறுவகத்தின் ஊழியர்களின் நியமனம், கடமைகள் என்பவற்றை குறித்தொதுக்கல், இடைநிறுத்தல் மற்றும் விலகல்;

(ii) இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டவாறான நிறுவகத்தின் பல்வேறுபட்ட குழுக்களின் அத்தகைய கடமைகள் அத்தியாவசியமாகக்கூடியவாறான அத்தகைய குழுக்களுக்கு தத்துவங்களை மீளக் கையளித்தல், மற்றும் அத்தகைய தத்துவங்களை மீளப் பெறுதல்;

(iii) அத்தகைய குழுக்களினால் பேரவைக்கு செய்யப்பட்ட விதப்புரைகளின் மீது தீர்மானித்தல், பேரவையினால் அத்தகைய குழுக்களுக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தல்;

(iv) அத்தகைய குழுக்களில் சேவையாற்றுவதற்கு பேரவையின் உறுப்பினர்களாகவிருப்பதற்கு ஆட்களை அழைத்தல்;

(v) இவ்விதிகளின் கீழ் நியமிக்கப்படும் ஏதேனும் குழுவில் அல்லது பேரவையில் எழும் வெற்றிடங்களை நிரப்புதல்;

(vi) நிறுவகத்தின் கணக்குகளை பரிசோதிப்பதற்கு தகைமை பெற்ற கணக்காய்வாளர்களின் நியமனம் மற்றும் ஆண்டிறுதி பொதுக்கூட்டத்திலும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் அவர்களுடைய முறையாக கணக்காய்வு செய்யப்பட்டதும் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான ஆண்டிறுதி கணக்காய்வு கூற்றுக்களை சமர்ப்பித்தல்;

(vii) நிறுவகத்தின் குறிக்கோள்களுக்கிணங்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பதவி தாங்குநர்களுக்கு அறிவுறுத்தல்களை ஒழுங்கமைத்தலும் வழங்குதலும் ;

(viii) நிறுவகத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பொருள்கோடல் மற்றும் தெளிவுபடுத்தல் மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட கருமங்களின் மீது தீர்மானித்தல்;

(ix) விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் திருத்தங்கள், மீளாய்வுகள் அல்லது நீக்கங்கள் அவசியமானபோது அத்தகைய கருமங்களின் மீதான தீர்மானம் மற்றும் சமர்ப்பிப்பானது ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தில் அங்கீகாரத்திற்காக அவற்றினை முன்வைத்தல் ;

(x) ஆண்டிறுதி பொதுக் கூட்டங்கள், விசேட பொதுக்கூட்டங்கள் மற்றும் பொதுக்கூட்டங்களை நடாத்துவதற்கு திகதிகள், நேரங்கள் மற்றும் இடங்களை தீர்மானித்தல்;

(xi) நிறுவகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தினை தாபித்தல், கட்டுப்படுத்தல் மற்றும் பேணல் ;

(xii) சர்வதேச மற்றும் தேசிய மட்டம் ஆகிய இரண்டிலும் விரிவுரைகள், பேச்சுவார்த்தைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாட்டினை ஒழுங்குபடுத்துதல்;

(xiii) புவிச்சரிதவியலில் மற்றும் இணைந்த பாடங்களில் புத்தகங்கள் மற்றும் பருவ விதழ்கள் மற்றும் ஏனைய இலக்கியத்தினை அச்சிடுதலும் வெளியிடுதலும் அத்துடன்

(xiv) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான இடைநேர்விளைவான பேரவையின் அபிப்பிராயமாகவுள்ள பொதுவான அனைத்து விடயங்களையும் செய்தல்.

23. (1) தலைவரானவர் பின்வருவனவற்றினைச் செய்தல் வேண்டும்:- தலைவர்.

(i) நிறுவகத்தின் ஆண்டிறுதி பொதுக்கூட்டம், விசேட பொதுக் கூட்டம் ஆகிய பேரவையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் ;

(ii) பேரவையின் முடிபுகளை பொதுக்கூட்டத்தின் முன்னர் வைத்தல் வேண்டும்;

(iii) நிறுவகத்தின் முறையான பணியில் பதவிதாங்குநர்களை மேற்பார்வை செய்தலும் பணித்தலும்; அத்துடன்

(iv) அவசரமான கருமங்களில் பேரவையின் சார்பாக செயலாற்றுதல் மற்றும் அதன் அடுத்த கூட்டத்தில் பேரவைக்கு எடுக்கும் நடவடிக்கைகளை அறிவித்தலும்.

(2) தலைவர்,உப தலைவர் சமுகமளிக்காத போது மற்றும் தலைவர் உப தலைவர் ஆகிய இருவரினதும் சமுகமின்மையின் போதும் பேரவையிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினரொருவர் பேரவையின் மற்றும் பொதுக்குழுவின் கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும் என்பதுடன் நடாத்துதலும் வேண்டும்.

24. (1) பொதுச்செயலாளரானவர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் பேரவையினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள்,பொறுப்புடைமைகள் மற்றும் கடமைகளை கொண்டிருத்தல் வேண்டும். பொதுச் செயலாளர்.

(2) அவருடைய விசேட கடமைகளும் பொறுப்புடைமைகளும் பின்வருவனவாதல் வேண்டும் :-

(i) நிறுவகத்தினதும் பேரவையினதும் கூட்டங்கள் மற்றும் ஆண்டிறுதி பொதுக்கூட்டங்களைக் கூட்டுதல் வேண்டும்;

(ii) தலைவரின் வழிகாட்டலின் பேரில் நிறுவகத்தின் பல்வேறுபட்ட குழுக்களை கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தல்;

(iii) தலைவரின் வழிகாட்டலின் மீது அல்லது பேரவையின் ஆறு (06) உறுப்பினர்களை விட குறையாதோரின் எழுத்திலான வேண்டுகோளின் பேரில் நிறுவகத்தின் விசேட பொதுக்கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தல் ; அத்துடன்

(iv) பேரவையின் சார்பில் ஆவணங்களில் கையொப்பமிடுதல்.

(3) பொதுச் செயலாளர் சமுகமளிக்காத போது பெரும்பான்மை வாக்குமூலம் நியமிக்கப்பட்ட பேரவையின் உறுப்பினர்கள் பொதுச் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்ட பொறுப்புடைமைகளையும் கடமைகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

பொருளாளர்.

25. (1) பொருளாளர் பேரவையின் தற்றுணிப்பிற்கமைய நிறுவகத்தின் எல்லாப் பணங்களினதும் சேகரிப்பு, பாதுகாப்பு, கட்டுக்காப்பு மற்றும் செலவினங்களுக்கு பொறுப்புடைமையாதல் வேண்டும்.

(2) பெற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட எல்லாப் பணங்களிலும் முறையான கணக்குகளைப் பேணுதலும் பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட எல்லா உபகரணங்களினதும் பெருள் பதிவேடுகளை,ஆவணங்களை வைத்திருத்தல் மற்றும் கேட்கப்படும்போது அத்தகைய கணக்கு புத்தகங்கள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஆவணங்களை பேரவைக்கு கிடைக்கப்பெறச் செய்தல் வேண்டும்.

(3) பேரவையினால் பணிப்புரைக்கப்பட்ட நிறுவகத்தின் பணங்களை முதலீடு செய்தல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர்களினால் முறையாக கணக்காய்வு செய்யப்பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவகத்தின் ஆண்டிறுதி கணக்குகளை உறுதிப்படுத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய ஆண்டிறுதி பொதுக் கூட்டத்தில் அத்தகைய கணக்குகள் ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தின் திகதிக்கு முன்னரான ஆகக்குறைந்த ஒரு கிழமையில் உறுப்பாண்மையை பரிசோதிப்பதற்கு கிடைக்கப்பெறச் செய்தல் வேண்டும்.

பதிப்பாசிரியர்.

26. பதிப்பாசிரியரானவர் :-

(அ) நிறுவகத்தின் உத்தியோகபூர்வ சஞ்சிகை வெளியீடுகள் மற்றும் பேரவையினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு வெளியீடுகள் என்பவற்றுக்கு பொறுப்புடைமையுடைய வராகவிருப்பார்.

(ஆ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய இடைக்காலங்களில் செய்தி வெளியீடு மற்றும் ஏனைய வெளியீடுகளை ஒன்று திரட்டுதல்.

அனுமதிகள் மற்றும் ஒழுக்கம் சார் செயல் முறைக்குழு.

27. (1) அனுமதிகள் மற்றும் ஒழுக்கம் சார் செய்முறை குழு மற்றும் கல்விக்குழு மற்றும் பேரவையினால் அவசியமாக கருதப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள் இருத்தல் வேண்டும்.

(2) பேரவையானது தேர்தலின் பின்னரான அதனது முதலாவது கூட்டத்தில் அனுமதிகள் மற்றும் ஒழுக்கம் சார் செயல்முறை குழு மற்றும் கல்விக் குழுவொன்றையும் நியமித்தல் வேண்டும்.

(3) அனுமதிகள் மற்றும் ஒழுக்கம் சார் செயல்முறை குழுவானது ஏழு கூட்டிணைக் கப்பட்டஉறுப்பினர்களைக் (07) கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவர்களின் இரண்டு உறுப்பினர்கள் தேர்தலின் பின்னரான அதன் முதலாவது கூட்டத்தில் நியமிக்கப்படும் வெளிச்செல்லும் குழுவின் உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

(4) தேர்தலின் பின்னரான அதனது முதலாவது கூட்டத்தில் பேரவையினால் நியமிக்கப்படும் அனுமதிகள் மற்றும் ஒழுக்கம் சார் செயல்முறை குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) விதி 6 இற்கிணங்க ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தவிசாளர்;

(ii) பதவி வழி உறுப்பினரொருவராக பணியாற்றுகின்ற நிறுவகத்தின் பொதுச் செயலாளர் ;

(iii) பதவி வழி உறுப்பினரொருவராக பணியாற்றுகின்றவரான கல்விக்குழுவின் தவிசாளர் ; அத்துடன்

(iv) கூட்டிணைக்கப்பட்ட நான்கு (04) உறுப்பினர்களுள் ஆகக் குறைந்தது இரண்டு (02) உறுப்பினர்கள் குழுவின் வெளிச்செல்லும் உறுப்பினர்கள் செல்லும் உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும்.

(5) அனுமதிகள் மற்றும் ஒழுக்க செயல்முறை குழுவானது பின்வரும் தத்துவங்கள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :-

(i) நிறுவன ரீதியான உறுப்பாண்மை தவிர்ந்த நிறுவகத்தின் உறுப்பாண்மைக்கான எல்லா விண்ணப்பங்களையும் கவனத்திற் கொள்ளுதல் மற்றும் அத்தகைய விண்ணப்பக்காரர்களின் நேர்முகப் பரீட்சை மற்றும் அத்தகைய விண்ணப்பத்தின் மீது பேரவைக்கு பரிந்துரைகளை செய்தல் ;

(ii) புவிச்சரிதவியல் எனும் தொழிலாண்மையில் உரிய செல்முறைக்காக நிறுவகத்தின் உறுப்பினர்களுக்கு உரிமையுடையதாகவும் முறையானதாகவும் இருத்தல் வேண்டும். விடயத்தின் மீது அல்லது ஒழுக்க செயல்முறை வடிவத்தில் பேரவைக்கு காலத்திற்குக் காலம் பரிந்துரைகளைச் செய்தல் வேண்டும் ;

(iii) பேரவையினால் அதற்கு குறிப்பீடு செய்யப்படும் அதன் தன்மையிலுள்ள ஒழுக்கம் சாரா மற்றும் அல்லது ஒழுங்காற்று தொடர்பான அனைத்து கருமங்கள் மீதும் விசாரணை செய்தலும் பேரவைக்கு விதந்துரைகளைச் செய்தலும்.

(6) அனுமதிகள் மற்றும் ஒழுக்க செயல்முறை குழுவானது அதன் நியமனத்தின் ஒரு மாத காலத்தினுள் கூடுதல் வேண்டும் என்பதுடன் அதன்பின் மூன்று (03) மாதங்களுக்கொருதடவை கூடுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தின் கூட்ட நடப்பெண் நான்காதல் (4) வேண்டும்.

(7) பதவி வழி உறுப்பினரல்லாத அனுமதிகள் மற்றும் ஒழுக்க செயல்முறை குழுவானது எவரேனும் உறுப்பினர் அத்தகைய கூட்டங்களிற்கு சமுகமளிப்பதற்கான அவருடைய இயலாமையை எழுத்தில் அறிவிக்காமல் குழுவின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களிலிருந்தான அவருடைய சமுகமின்மையானது குழுவில் அவருடைய உறுப்பாண்மையானது வெளிதானதாக கருதப்படுதல் வேண்டும்.

28. (1) கல்வி மற்றும் தொழிலாண்மை குழுவானது தேர்தலின் பின்னரான அதன் முதலாவது கூட்டத்தில் நியமிக்கப்படும் ஏழு கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். கல்விக் குழு.

(2) பேரவையினால் நியமிக்கப்படும் கல்விக் குழுவானது தேர்தலின் பின்னரான அதனது முதலாவது கூட்டத்தில் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) 6 ஆம் விதிக்கிணங்க ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தவிசாளர் ;

(ii) பதவி வழி உறுப்பினரொருவராக பணியாற்றுகின்றவரான நிறுவனத்தின் பொதுச் செயலாளர் ;

(iii) பதவி வழி உறுப்பினரொருவராக பணியாற்றுகின்றவரான அனுமதிகள் மற்றும் ஒழுக்க செயன்முறை குழுவின் தவிசாளர் அத்துடன்

(i) கூட்டிணைக்கப்பட்ட நான்கு (04) உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது இரண்டு (02) உறுப்பினர்கள் குழுவின் வெளிச்செல்லும் உறுப்பினர்களாகவிருப்பர்.

(3) கல்விக்குழுவானது பின்வரும் தத்துவங்கள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும் -

(i) எல்லா மட்டங்களிலும் புவிச்சரிதவியல் கல்வியை மேம்படுத்தல்;

(ii) அத்தகைய பரீட்சைகள் தொடர்பில் கல்வி கற்கை நெறிகளுக்காக காலத்திற்கு காலம் அவசியமாகக்கூடியவாறானதும் விதித்துரைக்கப்பட்டதுமான அங்கீகாரத்திற்குட்பட்டதுமான அல்லது ஏற்பாடு செய்யப்பட்டதுமான நிறுவகமான புவிச்சரிதவியலின் அத்தகைய பிரிவுகளில் திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் ஏனைய திறமைச் சித்திகளை அளிப்பதற்காக பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் நடாத்துவதற்காக ஏற்பாடு செய்தல்;

(iii) இவ்விதியின் (i) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் தொடர்பில் கல்விக் குழுவில் காலத்திற்குக் காலம் எழக்கூடியவாறான எவையேனும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பேரவைக்கு பெயர்களை பரிந்துரை செய்தல்;

(iv) அதன் தத்துவங்கள் மற்றும் பணிகளை திறன்பட நிறைவேற்றும் நோக்கத்திற்காக (கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத) பேரவையின் மேலதிக உறுப்பினர்களின் அங்கீகாரத்துடன் இணங்கியொழுகுதல் ஆயின் அத்தகைய தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் குழுவின் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமையை கொண்டிருத்தல் ஆகாது என்பதுடன் குழுவின் அபிப்பிராயம் அதனை பொருத்தமானதென கருதின் கவனத்திற்கெடுத்தலிலிருந்து விலக்களிக்கப்படுதலாகாது;

(v) விரிவுரையாளர்கள், பரீட்சகர்கள், மாணவர்கள், விரிவுரையாற்றும் போட்டியாளர்கள் மற்றும் அத்தகைய கல்வி கற்கை நெறிகள் மற்றும் பரீட்சைகளுடன் இணைந்த தனியாட்கள் என்போரின் நியமனம், இடைநிறுத்தல்,பதவி விலகுதல் உள்ளடங்கலாக நிறுவகத்தினால் நடாத்தப்படும், அனுசரணை செய்யப்படும் அல்லது அங்கீகரிக்கப்படும் கல்வி கற்கை நெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பிலான அனைத்து கருமங்களின் மீதும் பேரவைக்கு பரிந்துரை செய்தல்;

(vi) கல்வித் தகைமைகள், கல்வி திறமைச் சித்திகள் மற்றும் வேறு அளிப்புகளின் அளிப்புக்கு தகைமையுடைய மாணவர்களை பேரவைக்குப் பரிந்துரை செய்தல்;

(vii) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியினால் முற்போந்த ஆண்டின் போது அதன் செயற்பாடுகளை பேரவைக்கு ஆண்டிறுதி அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் ; அத்துடன்

(viii) நிறுவகத்தின் கல்வி கற்கை நெறிகள் மற்றும் பரீட்சைகளை ஆளுகின்ற ஒழுங்கு விதிகள் அவசியமானபோது வடிவமைத்தல் மற்றும் மீட்டல் ; அத்துடன்

(ix) கல்விக்குழுவின் நோக்கங்களுக்காக நிறுவகத்தின் நிதியங்களின் பயன்பாட்டின் மீது பேரவையின் முடிபை அங்கீகாரத்திற்கமைவான விடயம்.

(4) கல்விக் குழுவானது அதன்நியமனத்தின் ஒரு மாத காலத்தினுள் கூடுதல் வேண்டும் மற்றும் அதன் பின்னர் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொரு தடவை கூடுதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தின் கூட்ட நடப்பெண் நான்கு (4) ஆதல் வேண்டும்.

(5) அத்தகைய கூட்டங்களுக்கு சமுகமளிக்க அவருடைய இயலாமையை எழுத்தில் அறிவிக்காமல் குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிலிருந்து அவருடைய பதவி வழி உறுப்பினர்கள் சமுகமளிக்காத போது கல்விக்குழுவின் எவரேனும் உறுப்பினர் குழுவில் அவருடைய உறுப்பாண்மையை வெறிதாக்கியதாக கருதப்படுதல் வேண்டும்.

பொதுக் கூட்டங்கள்.

29. (1) பொதுக்கூட்டங்கள் அனைத்தும் ஏதேனும் அத்தகைய கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் உறுப்பினர்களின் மூன்றில் ஒன்றாகவிருத்தல் வேண்டும்.

(2) ஆண்டிறுதி பொதுக்கூட்டமானது பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான தேதியன்று ஒவ்வொரு ஆண்டிலும் ஏப்பிறல் 30 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) ஆகக்குறைந்தது 14 நாட்கள் அறிவித்தலானது ஆண்டிறுதி பொதுக்கூட்டத்திற்காக உறுப்பினர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(4) தவிர்க்கமுடியாத சூழ்நிலைகள் உள்ளவிடத்து ஆண்டிறுதி பொதுக்கூட்டமானது அதன்கண் தீர்மானிக்கப்பட்டதேதியன்று நடாத்தப்படுதல் ஆகாது. பேரவையானது அத்தகைய கூட்டம் தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு பிந்தாத தினத்திற்கு அத்தகைய கூட்டத்தினை பிற்போடுவதற்கு தத்துவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) பேரவையின் பதவி தாங்குநர்கள் பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் கணக்காளர் என்போர் ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(6) ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளரானவர் ஆண்டிறுதி அறிக்கையையும் குறிப்புகளையும் முன்வைத்தல் வேண்டும். அத்துடன் முற்போந்த ஆண்டின் ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தில் பொருளாளரானவர் கணக்காய்வாளரினால் முறையாக கணக்காய்வு செய்யப்பட்ட முற்போந்த ஆண்டின் கணக்கு கூற்றுக்களை முன்வைத்தல் வேண்டும்.

விசேட பொதுக் கூட்டங்கள்.

30. விசேட பொதுக்கூட்டமொன்று தலைவரின் பணிப்பின் மீது கூட்டத்திற்கு அழைக்கப்படும் நோக்கத்திற்காக தெளிவாக கூறப்படும் ஆகக் குறைந்தது இருபத்தைந்து (25) கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்களின் எழுத்து மூல வேண்டுகோளின் பேரில் பொதுச் செயலாளரினால் அழைக்கப்படலாம்.

அத்தகைய கூட்டத்தினை அழைக்கும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவை தவிர்ந்த வியாபாரமெதுவும் அத்தகைய கூட்டத்தில் கொடுத்து வாங்கல் செய்தலாகாது. அத்தகைய அறிவித்தலானது அதன் ஆகக் குறைந்தது ஏழு நாட்கள் (07) வழங்கும் வகையில் ஒவ்வொரு கூட்டிணைக்கும் உறுப்பினருக்கும் அனுப்புதல் வேண்டும்.

*31.* ஆண்டிறுதி பொதுக்கூட்டமொன்றுக்கு ஏதேனும் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புகின்ற உறுப்பினர்கள் அப்பிரேரணைகளை அத்தகைய கூட்டத்திற்கு ஆகக்குறைந்தது 14 நாட்களுக்கு முன்னர் பொதுச்செயலாளரினூடாக பேரவைக்கு அனுப்பப்படுதல் வேண்டும். பேரவையானது அதற்கு அனுப்பப்பட்ட பிரேரணைகளுக்கிடையிலிருந்து அப்பிரேரணைகள் பொதுக்கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தெரிவுசெய்யப்படலாம். தீர்மானங்கள்.

*32.* (1) ஒப்பப்பணம், கட்டணங்கள், என்ற வழிவகையினூடாக நிறுவகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணங்கள், உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் அல்லது ஆட்களிடமிருந்தான நன்கொடைகள், இலங்கை அரசாங்கத்திடமிருந்தான மானியக் கொடைகள், நிறுவகத்தின் குறிக்கோள்களை உணர்த்தும் நோக்கங்களிற்காக உள்நாட்டிலிருந்தாயினும் சரி அல்லது வெளிநாட்டிலிருந்தாயினும் சரியான ஏதேனும் மூலத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள், நிறுவகத்தின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் என்பன நிறுவகத்தின் நிதியங்களாகக் கருதப்படுதல் வேண்டும். நிதியங்களை கட்டுப்படுத்துதல்.

(2) அவர்களுடைய கட்டுக்காப்பிலிருக்கும் மற்றும் கொடுப்பனவுகள் அத்தகைய பணத்தொகைகளை பெற்றுக் கொள்ளும் பொறுப்புடைமையானது பேரவையின் பணிப்பின் கீழ் பொருளாளருக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

(3) நிறுவகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பணங்களும் இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகத்தின் சார்பில் பேரவையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான எவரேனும் அங்கீகரிக்கப்பட்ட வங்கி அல்லது வங்கிகள் அல்லது அத்தகைய சேமிப்பு கணக்குகள், நிலையான வைப்புகள், காப்புறுதி கம்பனி அல்லது வேறு நிதி நிறுவனத்தில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

அத்துடன் காசோலைகள் அல்லது அத்தகைய பணங்களின் மீளப்பெறுதலுக்கான வேறு ஆவணமும் பொருளாளரினாலும் மற்றும் பொதுச் செயலாளர் அல்லது தலைவர் ஆகிய இருவரில் ஒருவரினால் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) நிறுவகமானது தோதான அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் வெளிநாட்டு நாணயத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனும் கைமாற்றம் பணம், வரைவு, அஞ்சல் கைமாற்றம் தொலைநகல் கைமாற்றம் அல்லது வெளிநாட்டவரல்லாத வெளிநாட்டு நாணயக் கணக்கில் வேறு வகையில் அல்லது ஏதேனும் வெளிநாட்டு வங்கியில் வைப்பிலிடப்படலாம். ஆயின், அத்தகைய வங்கியிடமிருந்து காப்புறுதி வங்கியிடமிருந்து நிதிக்கம்பனியிடமிருந்து அல்லது அத்தகைய வங்கியின் வேறு ஏதேனும் கிளைக்கான வேறு நிதி நிறுவனம் என்பவற்றிலிருந்து எவையேனும் பணத்தொகைகளை கைமாற்றுவதற்கு அவசியமான பொருளாளர் அறிக்கைகள் உள்ளவிடத்து பேரவையானது அத்தகைய கைமாற்றத்திற்கு அதிகாரமளிக்கவும், காசோலைகள், அல்லது வேறு ஆவணங்களை கையொப்பமிடுவதற்கும் மற்றும் அத்தகைய பணங்களை வைப்பிடுதல் தொடர்பான கட்டளைகளை வழங்குவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) ஆண்டிறுதி பொதுக்கூட்டங்களில் பொருளாளர், பேரவையின் அங்கீகாரத்துடன் கணக்காய்வாளர்களினால் முறையாக கணக்காய்வு செய்யப்பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கணக்குகளின் ஆண்டிறுதி கூற்றினை முன்வைத்தல் வேண்டும். அத்துடன் ஆண்டிறுதி பொதுக்கூட்டமானது கணக்காய்வாளருடைய அறிக்கை மற்றும் சொல்லப்பட்ட ஆண்டிறுதி கணக்கு கூற்றுக்களை ஆராய்வதற்கும் கற்பதற்கும் மூன்று ஆட்கள் அடங்கியுள்ள குழுவொன்றினை நியமித்தல் வேண்டும். சொல்லப்பட்ட குழுவானது மற்றும் ஆண்டிறுதி அறிக்கைகள் தொடர்பிலான இயைபான அனைத்து தகவலையும் பொருளாளரினூடாக பெற்றுக் கொள்ள தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும். ஆண்டிறுதி பொதுக்கூட்டத்தின் தேதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் அவசியமான நடவடிக்கைக்காக பேரவைக்கு அதன்மீது அதன் பரிந்துரையினை சமர்ப்பித்தல் வேண்டும். தேதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் அவசியமான நடவடிக்கைக்காக பேரவைக்கு அதன்மீது அதன் பரிந்துரையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

*33.* (1) நிறுவகத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படும் தகைமைபெற்ற கணக்காய்வாளரானால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். கணக்காய் வாளர்.

*34.* நிறுவகத்திற்கெதிராக நீதிமன்றத்தில் கோப்பிடப்படுகின்ற ஏதேனும் வழக்கின் பட்சத்தில் தலைவர் மற்றும் பொதுச் செயலாளரானவர் எல்லா அவசியமானவான தத்துவங்கள், கடமைகள், மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும். அவை பேரவையின் வேறொரு உறுப்பினருக்கு பேரவையின் பங்குபற்றுதலுடன் அத்தகைய தத்துவங்களை கையளிப்பதற்கு தத்துவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். பேரவையானது வழக்கிடப்படும் பட்சத்திலான நடவடிக்கை முறைகள்.

விதிகளைத் திருத்துதல்.

*35.* (1) நிறுவகத்தின் விதிகள் சமுகமளித்தும் வாக்களித்துள்ளதுமான கூட்டிணைப்பு உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்கு குறையாத வாக்கின் மீது பொதுக்கூட்டத்தின் நோக்கத்திற்காகவன்றி மீட்டலோ, இல்லாதாக்கப்படுதலோ அல்லது திருத்தப்படுதலோ ஆகாது.

(2) உத்தேசிக்கப்பட்ட மீட்டல்கள், திருத்தங்கள் மற்றும் நீக்கங்கள் என்பனவற்றின் எழுத்திலான அறிவித்தலானது பொதுச் செயலாளரினூடாக பேரவைக்கு அத்தகைய பொதுக்கூட்டத்திற்கு முன்னர் இரண்டு கிழமைகளுக்கு பிந்தாமல் அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறான இவ்விதிகளுக்கமைய திருத்தங்கள், மீட்டல்களை மற்றும் நீக்கங்களை பொதுச் செயலாளரினால் விசேட பொதுக் கூட்டத்தில் அத்தகைய கூட்டத்தில் தலைமை தாங்கும் ஆளினால் உத்தேசிக்கப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

*36.* இவ்விதிகள் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி–

''நிறுவகம்'' என்பது, இலங்கை புவிச்சரிதவியல் நிறுவகம் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அத்துடன் 2014 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் (கூட்டிணைத்தல்) நிறுவகத்தினால் கூட்டிணைக்கப்பட்டதுமான புவிச்சரிதவியல் நிறுவகம் என அழைக்கப்படும்.

''பேரவை'' என்பது, 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் நிறுவகத்தின் அலுவல்களின் முகாமைத்துவத்திற்கும் நிருவாகத்திற்கும் கையளிக்கப்பட்ட நிறுவகத்தின் பேரவை எனப் பொருள்படும்.

''புவிச்சரிதவியலாளர்'' என்பது, புவியில் விஞ்ஞானம் அல்லது இணைந்த பாடங்களின் செயல்முறையில் ஈடுபட்டுள்ளவாறான தனியாள் எனப் பொருள்படும்.

"புவியியல் விஞ்ஞானம் அல்லது இணைந்த பாடம்" என்பது, பௌதிக புவிச்சரிதவியல், பளிங்கு சார் கனிப்பொருளியல், பெற்றோலியவியல், நீரியல், புகைப்படவியல், கட்டமைப்பு மற்றும் துறை சார் புவிச்சரிதவியல், புவியியல் பௌதிகம், பதவியியல் சார் இரசாயனவியல், பொறியியல்சார் புவிச்சரிதவியல், சுற்றாடல் சார் புவிச்சரிதவியல், மூலக்கூறு சார் புவிச்சரிதவியல், பெற்றோலிய புவிச்சரிதவியல், கடல்சார் புவிச்சரிதவியல், இரத்தினக்கல் சார்வியல் பொருளியல் சார் புவிச்சரிதவியல், தாதுப்பொருள் சார் வெடிப்பு மற்றும் புவிச்சரிதவியல் ஆபத்துக்கள் எனப் பொருள்படும்.

"பொதுக்கூட்டம்" என்பது, ஒன்றில் ஆண்டிறுதி பொதுக்கூட்டம் அல்லது விசேட பொதுக்கூட்டம் ஆகிய இரண்டில் ஒன்று எனப் பொருள்படும்.

அட்டவணை அ : கூட்டிணைப்பு உறுப்பினரொருவராக பூரணப்படுத்த வேண்டிய புவிச்சரிதவியல் எனும் துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வித்தகைமைகள் மற்றும் தொழிலாண்மை அனுபவம்.

4-422

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.